**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| STC No. | : 313/2021 |
| Name | : Ramalingam (HC) |
| P.W. | : 5 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 14.02.2025

**எதிரிகள் 1 மற்றும் 2 நீதிமன்றத்தில் ஆஜர்**

**முதல் விசாரணை**

நான் தற்போது குடிமங்கலம் காவல் நிலைய தலைமை காவலராக பணிபுரிகிறேன். கடந்த 15.04.2021 அன்று மாலை 00.30 மணிக்கு மடத்துக்குளம் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியில் இருந்த போது முருகன் (மைவாடி ஊராட்சி மன்றத் தலைவர்) அவர்கள் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரைப் பெற்று மடத்துக்குளம் காவல் நிலைய குற்ற எண். 100/2021 ச/பி 283 இதச–ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அசல் மற்றும் புகாரை இணைத்து மடத்துக்குளம் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். அதன் ஒரு நகலை புலன் விசாரணைக்கு காவல் உதவி ஆய்வாளர் ஆசீர்வாதம் அவர்களின் பார்வைக்கு வைத்தேன். இது சம்மந்தமாக காவல் உதவி ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அ.சா.1 புகார்தாரர் செயல் அலுவலர் அல்ல என்றால் சரிதான். அவர் ஊராட்சி மன்றத் தலைவர் ஆவார். மேலும் அ.சா.1 Planning Officer அல்ல என்றால் சரிதான். சாட்சி பின்பு அவரிடம் இருக்கும் புகார்தாரரின் letter pad யைப் பார்த்து அவர் ஊராட்சி மன்றத்

தலைவர்/செயல் அலுவலர் என்று சொல்லப்பட்டுள்ளதாக சொன்னார். அ.சா.1 கொடுத்த புகாரில் மருத்துவ கழிவுகள் பாறைக் குழியில் ஏற்கனவே கொட்டப்பட்டதாகவும், அதை பார்த்த பொது மக்கள் கூறிய விவரத்தின் அடிப்படையில் அ.சா.ஆ.1 புகார் கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பொதுவாக உடுமலைப்பேட்டை முனிசிபாலிட்டியில் குப்பைகளை சேகரித்து, சுத்திகரித்து அந்த குப்பையின் மூலம் உரம் தயாரிக்கப்படும் என்றாலும், அந்த உரத்தை விலைக்கு விற்பார்கள் என்றாலும், சம்பவம் நடந்த நாளன்று உரத்தை விற்றுவிட்டு வெறும் வண்டி தான் வந்தது என்றாலும் உரத்தை மிகக் குறைந்த விலைக்கு விற்றதால் அந்த உரத்திற்கான தேவை அதிகமாக இருந்தது என்றாலும் அந்த உரத்தை கேட்டவர்களுக்கு கொடுக்க முடியாததால் அவர்கள் அளித்த பொய்யான தகவலின் பேரில் இந்த புகார் அளிக்கப்பட்டது என்றால் சரியல்ல.

(2) சம்பவம் மாலை 06.00 மணிக்கு நடந்ததாக கூறப்பட்டுள்ளது என்றாலும், புகார் காலதாமதமாக அளிக்கப்பட்டது என்றாலும் காலதாமதத்திற்கான காரணங்களை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிடப்படவில்லை என்றாலும் சரிதான். மாலை சம்பவம் நடந்ததால் அதிகாலை 12.30 மணிக்கு புகார் அளிக்கப்பட்டது. நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கையில் உள்ள குற்றப் பிரிவு இதச 283 என்றாலும், அதற்கு அதிகபட்சமாக ரூ.200/- மட்டுமே அபராதம் என்றாலும், அது ஒரு சாதாரண குற்றம் என்றாலும் சரிதான். மேற்கூறிய குற்றத்திற்கு நடு இரவில் புகார் அளிக்க வேண்டிய தேவை இல்லை என்றாலும், அந்த புகாரை நாங்கள் பதிவு செய்ய வேண்டிய தேவை இல்லை என்றாலும் சரியல்ல. நடு இரவில் தான் புகார் அளித்தார்கள். அதனால் நாங்கள் பதிவு செய்தோம். சம்பவ இடத்தில் இருந்து காவல் நிலையத்திற்கு இரு சக்கர வாகனத்தில் அதிகபட்சமாக 10 நிமிடங்களில் வந்து விடலாம் என்றால் சரியல்ல. சுமார் 15 நிமிடங்கள் ஆகும். 2 ம் எதிரி சாகுல் அமீது குறித்து புகாரில் எதுவும் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். புகார்தாரர் பஞ்சாயத்து தலைவர் என்பதால் அவரது அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி இந்த புகார் அளித்துள்ளார் என்றாலும், அவருடைய அரசியல் செல்வாக்கிற்காக நாங்களும் அதை பதிவு செய்துள்ளோம் என்றாலும் சரியல்ல.

மறு விசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

VIJAYAKUMAR K

Digitally signed by VIJAYAKUMAR K
Date: 2025.02.14 10:27:51 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்